**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.MCOP. 60/2020**

**Deposition of R .W.2 - திருமதி. ஷாலினி**

**Dated:17.07.2026**

**<u>மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை. ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். 3வது எதிர்மனுதாரர் தரப்பில் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளோம். நேரில் பார்த்த சாட்சிகளை நாங்கள் விசாரிக்கவில்லை. விபத்து குறித்த ஆய்வறிக்கை தாக்கல் செய்துள்ளோம். முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதை வைத்து விபத்திற்கு யார் காரணம் என்று உறுதிப்படுத்த முடியாது என்றால் சரியல்ல. குற்ற இறுதி அறிக்கை இறுதியான ஆவணம் அல்ல என்றால் சரியல்ல. காப்பீடு சான்றை எங்கள் நிறுவனம் வழங்கியுள்ளது. மனுதாரர் நியாயமான இழப்பீடு கேட்டுள்ளார் என்றால் சரியல்ல. மனுதாரருக்கு 3வது எதிர்மனுதாரர் நிறுவனம் தான் இழப்பீடு வழங்க வேண்டுமென்றால் சரியல்ல.